# தொழில்நுட்பக் கல்வித் துறை

**அனுப்புநர்**

முதல்வர் (மு.கூ.பொ)
131, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
கீழப்பழுவூர், அரியலூர் – 621 707.

**பெறுநர்**

1. மாரியம்மன் துணை குழு,
   க.எண்.ஏ6/180, சீனிவாசன் நகர்,
   கீழப்பழுவூர், அரியலூர்– 621707.
2. விருப்பமுடைய பிற மகளிர்
   சுயஉதவி குழுக்கள்
   அரியலூர் மாவட்டம்.

**கடித எண்:1229/நி2/2022, நாள்: 14 .08.2026.**

**பொருள்:** நிருவாகம் – அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கீழப்பழுவூர், அரியலூர் – கல்லூரி சிற்றுண்டி சாலையை நடத்துவதற்கு – மகளிர் சுயஉதவிக்குழுக்களிடம் விலைப்புள்ளி கோருதல் – தொடர்பாக.

--<>--

இக்கல்லூரியில் அமைந்துள்ள சிற்றுண்டியை நடத்துவதற்கு அரியலூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. இக்கல்லூரி வளாகத்தில் உள்ள சிற்றுண்டி சாலையை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நடத்துவதற்கு, கல்லூரி வேலை நேரத்தில் கல்லூரி மற்றும் கல்லூரி சிற்றுண்டி சாலையை பார்வையிட்டு பட்டியலில் கண்டுள்ள உணவுப் பொருட்களை என்ன விலைக்கு மாணவர்களுக்கு வழங்கமுடியும் என்பதை குறித்த விலைப்புள்ளியை 27.08.2026–ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் கல்லூரிக்கு வந்து சேருமாறு நேரிலோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டப்படுகிறது. தாமதமாக வரும் விலைப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. சிற்றுண்டிக்கு மாத வாடகை ரூ.5000/– மாத தொடக்கத்தில் 5–ஆம் தேதிக்குள்ளும் சிற்றுண்டியில் உள்ள துணை மின்மீட்டரில் உள்ள பயன்படுத்திய அளவீட்டிற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ. 7.75 வீதம் கணக்கீட்டு பிரதி மாதம் 5–ஆம் தேதிக்குள்ளும் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். பொதுப்பணித்துறையால் மாத வாடகை திருத்தியமைக்கப்படும் பட்சத்தில் அதனையும் செலுத்தி அலுவலகத்தில் ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். மின் கட்டண தொகை அளவீடு ஒரு யூனிட்டிற்கு ரூ.7.75 என்பது அரசு / வாரியம் / உயர் அலுவலர்களால் மாற்றியமைக்கப்பட்டால் திருத்திய மின் கட்டணத்தையும் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | உணவுப் பொருள்களின் விபரம் | அளவு | விலை |
|---|---|---|---|
| 1 | டீ | 100 ml | |
| 2 | காபி | 100 ml | |
| 3 | பால் | 100 ml | |
| 4 | சமோசா | 100 gm | |
| 5 | வடை | 100 gm | |
| 6 | பஜ்ஜி | 100 gm | |
| 7 | போண்டா | 100 gm | |
| 8 | இரண்டு இட்லி, தோசை | 125 gm + (சாம்பார், சட்னி) | |
| 9 | இரண்டு, பூரி | 150 gm + (கிழங்கு (அ) சட்னி) | |
| 10 | இரண்டு புரோட்டா | 250 gm + குருமா | |
| 11 | கலவை சாதம், தயிர், புளி, எலுமிச்சை, வெஜ் பிரியாணி | 400 gm + (ஊறுகாய் அல்லது பொரியல்) | |
| 12 | குஸ்கா | 400 gm + குருமா | |
| 13 | எக்ரைஸ் | 400 gm + சாஸ் (அ) குருமா | |
| 14 | மதிய சாப்பாடு – சாதம் | 400 gm + (சாம்பார் + ரசம் + மோர்+ பொரியல் (அ) கூட்டு) | |

**நிபந்தனைகள்:**

அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்.

1. சிற்றுண்டி சாலைக்கு அரசினால் நிர்ணயிக்கப்படும் வாடகை, மின்சார கட்டணம் மற்றும் தண்ணீருக்கான கட்டணம் ஆகியவற்றை கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.
2. பிளாஸ்டிக் பொருட்கள் கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது.
3. கல்லூரி வேலை நாட்கள் மற்றும் வேலை நேரத்தில் மட்டுமே சிற்றுண்டி சாலை திறந்திருக்க வேண்டும்.
4. கல்லூரியால் நியமிக்கப்படும் பணியாளர் குழு அவ்வப்போது சிற்றுண்டி சாலையில் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் மற்றும் அளவை சரிபார்க்க அனுமதிக்க வேண்டும்.
5. சிற்றுண்டி சாலையையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.
6. தேவையற்ற வெளி நபர்களை எக்காரணம் கொண்டும் சிற்றுண்டி சாலைக்கு அழைத்து வரக்கூடாது.
7. சிற்றுண்டியில் சமைக்கப்படும் உணவை வெளியே எடுத்து சென்று விற்பனை செய்யக்கூடாது.
8. விலைப்பட்டியல் அடங்கிய பெயர்பலகை சிற்றுண்டி வளாகத்தில் பொருத்தப்பட வேண்டும்.
9. சமையலுக்கான பாத்திரங்கள் எரிவாயு, உபகரணங்கள், அறைகலன்கள் சொந்த செலவில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

10. வருடத்தில் 12 மாதங்களுக்கும் தவறாது வாடகை மற்றும் மின்கட்டணம் செலுத்த வேண்டும்.
11. உரிய தேதிக்குள் வாடகை, மின்கட்டணம் செலுத்த தவறினால் எவ்வித முன்னறிவிப்புன்றி சிற்றுண்டி நடத்துவதற்கான ஒப்பந்தம் இரத்து செய்யப்படும்
12. சிற்றுண்டி சாலை நடத்துவதற்கான அனுமதி பெற்றவுடன் FSSAI சான்றிதழ் ஒருவார காலத்திற்குள் பெற்ற சமர்ப்பிக்க வேண்டும்.
13. குறைவான விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்படும் குழுவிற்கு சிற்றுண்டி சாலை நடத்த அனுமதி வழங்கப்படும்.

முதல்வர்(மு.கூ.பொ)

அரியலூர் 621707